உ

சிவமயம்

# சிவபூமி

மாதாந்த செய்திப் பத்திரிகை

Monthly Journal of Sivapoomi

சிவம்~07 விசுவாசுவ வருடம் ஆடித் திங்கள் ஆடி ~2026 பூமி~07



# வேலையற்ற பட்டதாரிகளுக்கு வழி என்ன!

எங்கள் நாட்டில் ஏராளமான பட்டதாரிகள் பல்கலைக்கழக பட்டப்படிப்பு முடிந்து, அரச உத்தியோகமின்றி தவிக்கிறார்கள். பட்டதாரிகள் தாங்களாகவே சில முயற்சிகளைச் செய்து வல்லமை உடையவர்களாக பிறர் கையை எதிர்பாராது வாழப் பழகிக்கொள்ள வேண்டும். நவீன தொழில்நுட்ப. இயந்திரங்களின் தொகை அதிகரித்துக்கொண்டிருக்கும் வேளையில், சகலத்தினைக்களங்களிலும் அலுவலகங்களிலும் தனியார் வங்கிகளிலும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மிகவும் குறைந்து கொண்டு போகிறது. இந்நிலையை பல்கலைக்கழகத்தில் படிக்கும்போதே மாணவர்கள் விளங்கிக்கொள்ள வேண்டும்.

தற்போது எங்கள் நாட்டில், தென்னிலங்கையிலும் சரி இலங்கையின் ஏனைய பாகங்களிலும் சரி படித்து பட்டம் வெற்றவர்கள், அதற்குரிய உத்தியோகம் கிடைக்கும் வரை சும்மா காலத்தை வீணாக்குகிறார்கள். நாட்டுக்கு தேவையான தொழில் சார்ந்த கல்வியை மேற்கொண்டவர்கள், பட்டப்படிப்பு முடிவதற்கிடையிலேயே தொழில் முயற்சியில் இறங்கிவிடுகிறார்கள்.

எங்கள் மண்ணில் சரியான திட்டமிடல் இல்லாத காரணத்தினால் நாளுக்கு நாள் வேலையற்ற பட்டதாரிகள் தொகை அதிகமாகிக்கொண்டு இருக்கிறது. ஒரு காலத்தில் பட்டதாரிகளுக்கு எவ்விதமான பரீட்சையும் இன்றி ஆசிரிய நியமனம், முகாமைத்துவ உதவியாளர் நியமனம் மற்றும் அலுவலக உத்தியோகத்தர் நியமனங்கள் கூவி அழைத்து வழங்கப்பட்டன. சமகாலத்தில் பரீட்சை அதிலும் பல பட்டதாரி மாணவர்களும் போதிய புள்ளிகளை பெறமுடியவில்லை. 25 நியமனங்களுக்கு 25 000 பட்டதாரிகள் பரீட்சை எழுதும் நிலைமைகளே காணப்படுகிறது.

பல்கலைக்கழகம் செல்லாத அடுத்த நிலை மாணவர்கள் இலங்கையில் உள்ள தேசிய கல்வியற் கல்லூரிகளில் டிப்ளோமா (னுipடழஅய) பட்டம் பெற்று, பரீட்சை முடிந்தவுடன் பாடசாலைகளுக்கு நியமிக்கப்படுவதனால், பாடசாலை ஆசிரியர் வெற்றிடங்களும் தேசிய கல்வியற் கல்லூரி ஆசிரிய மாணவர்களால் நிரப்பப்படுகிறது. எனவே இனிமேல் பட்டதாரிகளுக்கு பரீட்சை வைத்துத்தான் ஆசிரியர்களாக நியாமிப்பது என அரசாங்கம் முடிவு செய்துவிட்டது. ஆசிரியர்களின் தொகை எல்லை இல்லாமல் அதிகரிப்பதனால், கல்விக்கான செலவு அதிகம் ஆகுறது. ஆசிரிய

நியமனங்களைக் கட்டுப்படுத்துங்கள் என்று உலக வங்கியும், ஆசிய அபிருத்தி வங்கியும் கல்வி அமைச்சுக்கு அடிக்கடி ஆலோசனை வழங்கி வருகிறார்கள். இந்நிலையில் பட்டதாரிகளின் எதிர்காலம் என்னவாகுமோ? விஞ்ஞானத்துறை சார்ந்து பட்டம் பெற்றவர்கள் நியமனம் பெறுவதற்கிடையில் தாதியர், பிசியோதெரபி (Physiotherapy) மற்றும் பாமசி போன்ற துறைகளில் பட்டம் பெற்றவர்களுக்கு உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பு அதிகரித்திருக்கிறது. ஆனால் சாதாரண 'BSC' பட்டம் பெற்றவர் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. பாடசாலைகளில் இப்போது பாடப் பொருத்தமான ஆசிரியர்கள் இல்லை. நாடகமும் அரங்கியலும், சங்கீதம் மற்றும் நடன ஆசிரியர்கள் பாடசாலைகளில் அதிகளவு உள்ளார்கள் என்று வடக்குமாகான தரவுகள் குறிப்படுகிறது. காலத்துக்காலம் இத்தகைய கலைத்துறை சார்ந்த நியமனங்களால், ஒரு பாடசாலையில் மூன்று நடன ஆசிரியர், மூன்று சங்கீத ஆசிரியர், மூன்று நாடகத்துறை சார்ந்த ஆசிரியர் என கலைத்துறை ஆசிரியர்கள் குவிக்கப்படுவதாக தரவுகள் சுட்டிக் காட்டப்படுகிறது

எனவே எதுவும் சீரான திட்டமிடலற்ற ஒரு கட்டமைப்பாக இருப்பதனால், பட்டதாரிகள் அநியாயமாக காத்திருக்கிறார்கள். கல்வியியலாளர்கள் இது தொடர்பாக சரியான திட்டமிடலை மேற்கொண்டு மாணவர்களை ஆற்றுப்படுத்தாவிட்டால், எதிர்காலத்தில் பல்கலைக்கழக படிப்புக்கூட ஒரு கேள்விகுறியதாகிவிடும். எந்த அரசாங்கங்கள் ஆட்சி அதிகாரத்திற்கு வந்தாலும் வேலையில்லா பட்டதாரிகள் பிரச்சினைகள் தொடர்பாக சரியான முடிவெடுக்க முடியாமல் தத்தளிக்கிறது. அது பூரணமாக விளங்குகிறது. இந்நிலை தொடராமல் இருப்பதற்கு பல்கலைக்கழத்தில் பட்டம் பெறுகின்றவர்கள், சுய திட்டமிடலூடாக, சில தொழில் வாய்ப்புக்களை உருவாக்கி, நல்ல முயற்சிகளில் இடுபடுவது எதிர்காலத்துக்கு பயனாகும்.

**கலாநிதி செஞ்சொற்செல்வர்**
**ஆறு.திருமுருகன்**


**ஆசிரியர்**
**கலாநிதி. செஞ்சொற்செல்வர் ஆறு. திருமுருகன்**

**உதவி ஆசிரியர்**
**திரு. ச. சந்தோஷன்**
**திரு. ஐ. வி. மகாசேனன்**

# இலண்டனில் தமிழ்ப்பணிக்கு புதிய பரிமாணம் அளித்து வரும் அறிவு அறக்கட்டளை மூன்றாவது கம்பன் விழா கோலாகலம்




இலண்டன் வாழ் தமிழர்களிடையே தமிழ் மொழி, இலக்கியம், பண்பாடு மற்றும் அறப்பணியை ஒருங்கிணைத்து முன்னெடுத்து வரும் இலாப நோக்கற்ற அமைப்பான அறிவு அறக்கட்டளை, தனது பல்வேறு கல்வி, சமூக மற்றும் பண்பாட்டுச் செயற்பாடுகளின் ஊடாக தனித்துவமான இடத்தைப் பெற்றுள்ளது.

திரு. பதஞ்சலி நவேந்திரனின் தொலைநோக்குப் பார்வையுடனும், திரு. மு. குமாரநாயகம், திரு. ஆ. ஞானேந்திரன், திரு. தி. சண்முகதாசன் மற்றும் திரு. பிரபா செல்லத்துரை ஆகியோரின் ஒத்துழைப்புடனும் உருவாக்கப்பட்ட இவ்வறக்கட்டளை, ”தமிழோடு அறப்பணி” என்ற மகுட வாசகத்தை முன்னிறுத்தி உலகத் தமிழர்களுக்காக பல்வேறு பயனுள்ள செயற்றிட்டங்களை முன்னெடுத்து வருகிறது.



அறிவு அறக்கட்டளையின் தொடக்ககாலச் செயற்பாடுகள் தாயகத்தை மையப்படுத்தியவையாக அமைந்தன. தமிழர் கல்விப் பாரம்பரியத்தின் அடையாளமாக விளங்கும் யாழ் இந்துக் கல்லூரி மாணவர்களின் ஆளுமை மற்றும் விழுமிய வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டு, செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்களை வளவாளராகக் கொண்டு ”மாணவர்களிற்கான அறக்கல்வி” என்ற தலைப்பில் செயலமர்வு வெற்றிகரமாக நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இளைய தலைமுறையினரின் எதிர்கால முன்னேற்றத்தை இலக்காகக் கொண்டு, பல்வேறு துறைசார் வல்லுநர்களின் பங்களிப்புடன் இணையவழி தொழில் வழிகாட்டல் நிகழ்ச்சிகள் தொடர்ச்சியாக நடத்தப்பட்டன. 2022 ஜூன் 15 ஆம் திகதி யாழ் இந்துக் கல்லூ ரி மாணவர்களுக்காக திருமதி பாரதி பாஸ்கர் தலைமையில் இடம்பெற்ற தொழில் வழிகாட்டல் நிகழ்வு, மாணவர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றதுடன், எதிர்காலக் கல்வி மற்றும் தொழில் திட்டமிடலுக்குப் பயனுள்ளதாக அமைந்தது.

இதேவேளை, கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களின் பங்கேற்புடன் ”கம்பவாரிதி ஜெயராஜ் உடனோர் இனிய மாலைப்பொழுது” என்ற இலக்கிய நிகழ்வு அல்பேர்ட்டன் பாடசாலையில் சிறப்பாக நடத்தப்பட்டது. ”அறிந்து கொள்வோம், தெரிந்து கொள்வோம்”என்ற தலைப்பில் ஹீலர் பாஸ்கர் வளவாளராகக் கலந்து கொண்ட இணையவழி நிகழ்வும் மக்களின் பாராட்டைப் பெற்றது.






இதற்கு மேலாக, பரம்பரைச் சொத்து வரி, முதியோர் பராமரிப்பு இல்லங்களில் அனுமதி, பராமரிப்புச் சேவைகள் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், ”நிறைவான வாழ்வை நோக்கி” என்ற தலைப்பில் குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் பாலியல் துன்புறுத்தலுக்கு ஆளானோருக்கான ஆதரவு குறித்த கருத்தரங்குகள், “யோகா, தியானம் மற்றும் ஆரோக்கியமான உணவு” என்ற தலைப்பில் ஆரோக்கியமான வாழ்வியல் முறைகள் தொடர்பான செயலமர்வுகள் உள்ளிட்ட பல்வேறு சமூக நலத் திட்டங்களும் அறிவு அறக்கட்டளையால் முன்னெடுக்கப்பட்டுள்ளன. எனினும், அறிவு அறக்கட்டளையின் அடையாளமாகத் திகழ்வது அதன் வருடாந்திர கம்பன் விழாக்களாகும். கம்பனின் இராமகாவியத்தையும், அதில் பொதிந்துள்ள அறவுரைகளையும் உலகத் தமிழர்களிடையே கொண்டு சேர்க்கும் உயரிய நோக்கில் இவ்விழாக்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

2024 ஆம் ஆண்டு இலண்டனில் முதன்முறையாக நடைபெற்ற கம்பன் விழா, தமிழர்களின் பேராதரவுடன் அபார வெற்றியைப் பெற்றது. கம்பவாரிதி இ. ஜெயராஜ், திருமதி பாரதி பாஸ்கர், டத்தோ டாக்டர் சரவணன், பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன், பாரதி கிருஷ்ணா மற்றும் தமிழருவி சிவகுமார் ஆகியோரின் செம்மையான தமிழ்ச் சொற்பொழிவுகள் அரங்கில் திரண்டிருந்தோரின் பாராட்டைப் பெற்றன.



அதனைத் தொடர்ந்து 2025 ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது கம்பன் விழாவில் முனைவர் பர்வின் சுல்தானா, கவிஞர் வாசு மற்றும் திரு. இரா. மது ஆகியோரின் இலக்கிய உரைகள் நிகழ்வை மேலும் மெருகூட்டின. முதலாவது ஆண்டைவிட இருமடங்குக்கும் அதிகமானோர் கலந்துகொண்டமை, கம்பன் விழாவுக்குக் கிடைத்து வரும் மக்கள் ஆதரவின் வளர்ச்சியை வெளிப்படுத்துவதாக அமைந்தது. இந்த வெற்றிப் பயணத்தின் தொடர்ச்சியாக, அறிவு அறக்கட்டளையின் மூன்றாவது கம்பன் விழா 2026 ஆம் ஆண்டு ஜூன் 27-28ஆம் திகதிகளில் இலண்டனில் சிறப்பாக நடைபெற்றிருந்தது. கம்பவாரிதி ஜெயராஜ் அவர்களின் ஆசியுடன் நடைபெற்றிருந்த இவ்விழாவில் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன், இலக்கியச்சுடர் இராமலிங்கம், பேராசிரியர் ஸ்ரீ பிரசாந்தன், தமிழ்ச்சுடர் தாமல் கோ. சரவணன் மற்றும் கோமதி சங்கர் சுப்பிரமணியன் ஆகியோர் சிறப்புரையாற்றியிருந்தார்கள்.

தமிழ் மொழி, இலக்கியம், அறம் மற்றும் பண்பாட்டு விழுமியங்களை உலகத் தமிழர்களிடையே வலுப்படுத்தும் நோக்கில் அறிவு அறக்கட்டளை முன்னெடுத்து வரும் பணிகள், புலம்பெயர் தமிழ்ச் சமூகத்தில் பரவலான வரவேற்பைப் பெற்று வருவதுடன், தமிழ் மரபை அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் அர்ப்பணிப்புமிக்க முயற்சியாகவும் பாராட்டப்படுகின்றன.





# யாழ்ப்பாணத்தில் ஓவியர் கண்ணாவின் 'கோடுகளும் கோலங்களும்' நூல் அறிமுக விழா




இலங்கையின் ஓவியம் மற்றும் சிற்பத்துறையில் முதன்முதலாக களனிப் பல்கலைக்கழகத்தின் நுண்கலை வளாகத்தில் பட்டம் பெற்ற இரு தமிழ் கலைஞர்களில் ஒருவரும் சிரேஷ்ட ஓவியருமான கண்ணா அவர்களின் "கண்ணாவின் கோடுகளும் கோலங்களும்" நூலின் அறிமுகமும் நயவுரை நிகழ்வும் ஜுலை 5 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் மருதனார்மடத்தில் அமைந்துள்ள சேர். பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீட அரங்கில் சிறப்பாக நடைபெற்றது. மங்கல விளக்கேற்றல், தேவாரம் மற்றும் தமிழ்த்தாய் வாழ்த்துடன் ஆரம்பமான இந்நிகழ்வில், செல்வி சிவானி ரவிநந்தா வரவேற்புரையாற்றியதுடன், நிகழ்ச்சியையும் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.

யேர்மனியில் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக ஓவியம் மற்றும் சிற்பத்துறையில் பெற்ற அனுபவங்கள், அந்நாட்டின் கலைப்பார்வைகள், ஓவியரின் கைவண்ணத்தில் உருவான படைப்புகள், சர்வதேச அங்கீகாரங்கள் மற்றும் விருதுகள் உள்ளிட்ட பல்வேறு தகவல்களை உள்ளடக்கிய அரிய ஆவண நூலாக "கண்ணாவின் கோடுகளும் கோலங்களும்" அமைந்துள்ளதாக நிகழ்வில் எடுத்துரைக்கப்பட்டது.

ஓவியம் மற்றும் சிற்பக்கலையைப் பயிலும் மாணவர்களுக்கு வழிகாட்டியாகவும் ஊக்கமளிக்கும் கையேடாகவும் இந்நூல் அமையும் என்ற நோக்கில், காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீட மாணவர்கள் மற்றும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் பயிலும்





ஆசிரிய மாணவர்கள் முன்னிலையில் நூல் அறிமுகப்படுத்தப்பட்டமை சிறப்பம்சமாக அமைந்தது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தமிழ்த்துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் ஆசியுரையாற்றினார். பிரதம விருந்தினராக சேர். பொன்னம்பலம் இராமநாதன் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீடத்தின் இசைத்துறைத் தலைவர் எஸ். சூரியகுமார் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார். நூலுக்கான நயவுரைகளை காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீட சித்திரத்துறைத் தலைவர் வ. பாலமுருகன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர் திருமதி சுதர்சினி விக்னமோகன் மற்றும் காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீட முதலாம் ஆண்டு சித்திரத்துறை மாணவர் கெவின் எஸ். ரீபன் ஆகியோர் வழங்கினர். குறிப்பாக, ”கண்ணாவின் கோடுகளும் கோலங்களும் “கலைஞனின் தூரிகை வழி...” என்ற தலைப்பில் மாணவர் கெவின் வழங்கிய நயவுரை, நிகழ்வில் கலந்துகொண்டோரின் பாராட்டைப் பெற்றது.



பதிலுரையாற்றிய நூலாசிரியர் ஓவியர் கண்ணா, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முதலாவது துணைவேந்தரான அமரர் க. கைலாசபதி அவர்களை நன்றியுடன் நினைவுகூர்ந்தார். இன்றைய மாணவர்கள் சித்திர மற்றும் சிற்பக்கலைகளைக் கற்கும் வாய்ப்புக்கான அடித்தளத்தை பல தசாப்தங்களுக்கு முன்னரே உருவாக்கியவர் அமரர் கைலாசபதி எனக் குறிப்பிட்ட அவர், யேர்மனியில் பெற்ற தனது கலை அனுபவங்கள் தாயக மாணவர்களுக்கும் பயன்பட வேண்டும் என்ற உயரிய நோக்கிலேயே இந்நூலை வெளியிட்டதாகத் தெரிவித்தார். மேலும், நூல் வெளியீட்டிற்கு ஒத்துழைப்பு வழங்கிய பல்கலைக்கழக நிர்வாகம், துறைத் தலைவர்கள் மற்றும் விரிவுரையாளர்களுக்கு தனது நன்றியையும் தெரிவித்தார்.



விழாவின் மற்றொரு சிறப்பம்சமாக, வழக்கமாக வழங்கப்படும் பொன்னாடை மற்றும் மாலைகளுக்குப் பதிலாக, நிகழ்வில் பங்கேற்ற ஆளுமைகள் அனைவருக்கும் பழக்கூடைகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது. ஆரோக்கியத்தையும் சுற்றுச்சூழல் நட்பையும் வலியுறுத்திய இந்தப் புதிய முயற்சி, சபையோரின் பாராட்டைப்பெற்றது.
இறுதியாக, வெற்றிமணி பத்திரிகையின் உலகத் தொடர்பாளர் யோ. சாந்தி நன்றியுரையாற்றியதுடன், கலைஞர்கள், விரிவுரையாளர்கள், மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள் மற்றும் கலை ஆர்வலர்களின் பங்குபற்றலுடன் நிகழ்வு இனிதே நிறைவுற்றது.

நிகழ்வின் நிறைவில், ஓவியம் மற்றும் சிற்பக்கலையைப் பயிலும் மாணவர்கள், விரிவுரையாளர்கள், கலைஞர்கள், பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் அதிபர்கள் ஆகியோருக்கு ”கண்ணாவின் கோடுகளும் கோலங்களும்” நூலின் சிறப்புப் பிரதிகள் இலவசமாக வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.







# ஈழத்துச் சிதம்பரத்தில் நடைபெற்ற மகா கும்பாபிஷேக விழாவில் தமிழக ஆதீன முதல்வர்களின் ஆசி பெற்றார் சிவபூமி அறக்கட்டளைத் தலைவர்



ஈழத்துச் சிதம்பரம் எனப் போற்றப்படும் காரைநகர் திண்ணபுரம் அருள்மிகு ஸ்ரீ சௌந்தராம்பிகா சமேத ஸ்ரீ சுந்தரேஸ்வரப் பெருமான் ஆலயத்தின் புனராவர்த்தன ஜீர்ணோத்தாரண அஷ்டபந்தன சமர்ப்பண நவகுண்ட பக்ஷ மகா யாக பிரதிஷ்டை மற்றும் மகா கும்பாபிஷேக விழா, ஜூலை 05 ஆம் திகதி காலை பக்தி பூர்வமாகவும் சிறப்பாகவும் நடைபெற்றது.

இந்நிகழ்வில் தமிழகத்தின் முக்கிய சைவ ஆதீனங்களின் குருமகாசந்நிதானங்கள் பங்கேற்று, ஆலய மகா கும்பாபிஷேக நிகழ்வை ஆன்மிக எழுச்சியுடன் சிறப்பித்தனர்.

விழாவில் திருக்கயிலாய பரம்பரை தருமை ஆதீனத்தின் 27 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் மாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், திருக்கயிலாய பரம்பரை வேளாக்குறிச்சி ஆதீனத்தின் 18 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சத்தியஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள், திருக்கயிலாய பரம்பரை செங்கோல் ஆதீனத்தின் 103 ஆவது குருமகாசந்நிதானம் சீர்வளர்சீர் சிவப்பிரகாச தேசிக சத்தியஞான பரமாசாரிய சுவாமிகள், திருக்கயிலாய பரம்பரை பேரூர் ஆதீனத்தின் 25 ஆவது குருமகாசந்நிதானம் திருப்பெருந்திரு சாந்தலிங்க மருதாசல அடிகளார், பழனி சாதுசாமிகள் மடத்தின் குருமகாசந்நிதானம் தவத்திரு சாது சண்முக அடிகளார் மற்றும் தென்சேரிமலை ஆதீனத்தின் குருமகாசந்நிதானம் தவத்திரு



முத்துசிவராமசாமி அடிகளார் ஆகியோர் கலந்து கொண்டு அருளாசி வழங்கினர். இந்த ஆன்மிக நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள், தமிழகத்தின் முன்னணி ஆதீன முதல்வர்களை நேரில் சந்தித்து அவர்களிடம் ஆசி பெற்றார். அப்போது சிவபூமி அறக்கட்டளையின் சமய, பண்பாட்டு மற்றும் தமிழ்ச் சேவைகள் தொடர்பாக ஆதீனங்கள் பாராட்டியிருந்தனர்.

ஈழத்திலும் தமிழகத்திலும் சைவ சமய மற்றும் ஆன்மிக உறவுகளை மேலும் வலுப்படுத்தும் வகையில் இந்நிகழ்வு அமைந்துள்ளதாக பக்தர்களும் சமயப் பிரமுகர்களும் கருத்து தெரிவித்தனர். மகா கும்பாபிஷேக விழாவில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்து அருள்பெற்றனர்.









# நல்லை ஆதீனத்திற்கு கொரிய மதத் தலைவர்கள் விஜயம்

யாழ்ப்பாணம்:நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் கொரியா நாட்டைச் சேர்ந்த மதத் தலைவர்கள் ஜூலை-03 அன்று மரியாதை நிமித்தமான சந்திப்பொன்றை மேற்கொண்டனர்.

நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் இரண்டாவது குருமகாசந்நிதானம் பூரணத்துவமடைந்த வெற்றிடத்தை தொடர்ந்து, நம்பிக்கை பொறுப்புச் சபை மற்றும் சைவத் தலைவர்களுடன் இச்சந்திப்பு இடம்பெற்றது.



இதன்போது, நல்லை ஆதீன நம்பிக்கைப் பொறுப்புச் சபையின் செயலாளரும் செஞ்சொற்செல்வருமான கலாநிதி ஆறு. திருமுருகன், ஆதீனத்தின் சமயப் பிரதிநிதிகள் ஆகியோர் கொரிய மதத் தலைவர்களை வரவேற்று கலந்துரையாடினர்.

சந்திப்பின் போது சைவ சமயப் பாரம்பரியம், நல்லை ஆதீனத்தின் வரலாற்றுப் பங்களிப்பு, மதங்களுக்கு இடையிலான நல்லுறவு மற்றும் சர்வதேச ஆன்மிக ஒத்துழைப்பை மேம்படுத்துவது தொடர்பாக கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

இச்சந்திப்பு நல்லை ஆதீனத்திற்கும் சர்வதேச மத அமைப்புகளுக்கும் இடையிலான உறவுகளை மேலும் வலுப்படுத்தும் முக்கிய நிகழ்வாக அமைந்ததுடன், பரஸ்பர புரிந்துணர்வையும் சமய நல்லிணக்கத்தையும் ஊக்குவிக்கும் முயற்சியாகவும் அமைந்தது.





# நல்லை ஆதீனத்தில் தேவாரப் பண்ணிசை ஆய்வுக் கருந்தரங்கு



இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களமும் நல்லூர் பிரதேச செயலகமும் இணைந்து ஏற்பாடு செய்த தேவாரப் பண்ணிசைச் சிறப்பு ஆய்வுக் கருந்தரங்கு, ஜூலை 04 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு நல்லைத் திருஞானசம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் திரு ய. அனிருத்தனன் தலைமை தாங்கினார்.

நிகழ்வில் திருச்சி தருமை ஆதீன மௌனமட கட்டளை விசாரணை முனைவர் ஸ்ரீமத் மௌன திருஞானசம்பந்த தம்பிரான் சுவாமிகள் ஆசியுரை வழங்கினார். தொடர்ந்து நல்லை ஆதீன அறக்கட்டளையின் செயலாளர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் வாழ்த்துரையாற்றி, தேவாரப் பண்ணிசை மரபினைப் பாதுகாத்து அடுத்த தலைமுறையினரிடம் கொண்டு சேர்ப்பதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

கருத்தரங்கின் வளவாளராக தருமை ஆதீன தேவாரப் பாடசாலையின் தலைமை ஆசிரியரும் பத்மஸ்ரீ விருது பெற்ற திருமுறைக் கலாநிதியுமான திருத்தணி சுவாமிநாதன் ஓதுவார் கலந்து கொண்டு,



தேவாரப் பண்ணிசையின் வரலாறு, இசை மரபு, வழிபாட்டு முக்கியத்துவம் மற்றும் அதன் பண்பாட்டு பெறுமதி குறித்து விரிவான ஆய்வுரையாற்றினார்.

இந்நிகழ்வில் கல்வியாளர்கள், ஓதுவார்கள், அறநெறிப் பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள், சமயப் பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

தேவாரப் பண்ணிசை மரபை ஆவணப்படுத்தி, அதன் பாரம்பரிய இசைச் செல்வத்தை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்லும் நோக்கில் இவ்வாறான ஆய்வுக் கருத்தரங்குகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட வேண்டுமென நிகழ்வில் கலந்து கொண்டோர் கருத்துத் தெரிவித்தனர்.







# காரைநகர் பிரதேச சபை வளாகத்தில் திருவள்ளுவர் உருவச்சிலை திறப்பு விழா









காரைநகர் பிரதேச சபை பிரதான வாயிலில் நிறுவப்பட்ட திருவள்ளுவர் உருவச்சிலை, ஜூலை 02 ஆம் திகதி நடைபெற்ற சிறப்புமிக்க நிகழ்வில் மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்டது. தமிழர் பண்பாட்டு மரபையும், அறம், ஒழுக்கம் மற்றும் மனிதநேய விழுமியங்களையும் உலகறியச் செய்த திருவள்ளுவரின் பெருமையைப் போற்றும் நோக்கில் அமைக்கப்பட்ட இவ்வுருவச்சிலை திறப்பு விழாவில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த முக்கியஸ்தர்கள், சமய மற்றும் சமூகப் பிரமுகர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.இந்நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் சிறப்பு அதிதியாக கலந்து கொண்டு, திருவள்ளுவர் உருவச்சிலைக்கு மலர்மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். அதனைத் தொடர்ந்து, திருவள்ளுவரின் அறவுரைகள் இன்றைய சமூக வாழ்விலும் நிலைத்த வழிகாட்டுதலாக விளங்குகின்றன என்பதையும், அவரது சிந்தனைகளை இளைய தலைமுறையினரிடம் கொண்டு சேர்க்கும் வகையிலான முயற்சிகள் தொடரப்பட வேண்டும் என்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டோர் வலியுறுத்தினர்.

இந்நிகழ்வு தமிழர் பண்பாட்டு அடையாளத்தையும், திருவள்ளுவர் போதித்த அறநெறி விழுமியங்களையும் சமூகத்தில் மேலும் வலுப்படுத்தும் வகையிலான முக்கிய பண்பாட்டு நிகழ்வாக அமைந்தது.

# சிவபூமி பாடசாலையின் மெய்வல்லுநர் போட்டி உற்சாகமாக நடைபெற்றது



சிவபூமி பாடசாலை கோண்டாவில், கிளிநொச்சி மற்றும் சாவகச்சேரி இணைந்து ஏற்பாடு செய்த ”மெய்வல்லுநர் போட்டி 2026”, ஜூலை 10 ஆம் திகதி கோண்டாவில் அமைந்துள்ள சிவபூமி பாடசாலை மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு சிவபூமி பாடசாலை கோண்டாவில் அதிபர் சாந்தாதேவி இராதாக்கிருஷ்ணன் தலைமை தாங்கினார்.

பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இணைந்த சுகாதார விஞ்ஞான பீடத்தின் விளையாட்டு விஞ்ஞான அலகின் தலைவரும் பேராசிரியருமான சபாஆனந் சிவநேசன் கலந்து கொண்டு மாணவர்களின் உடல்திறன், ஒழுக்கம் மற்றும் விளையாட்டின் முக்கியத்துவம் குறித்து உரையாற்றினார். வெற்றி பெற்ற மாணவர்களுக்கான பரிசுகளினை திருமதி சுகந்தினி சபாஆனந் வழங்கி சிறப்பித்தார்.

மேலும் சிறப்பு விருந்தினராக திரு. வே. சிவசுந்தரம் (தொழிலதிபர் லண்டன்), கௌரவ விருந்தினராக லயன் டி. பிரணவன் (JP) (தொழிலதிபர் இலங்கை) ஆகியோரும் கலந்து கொண்டு கௌரவித்தனர். பல்வேறு தடகள மற்றும் மெய்வல்லுநர் போட்டிகளில் மாணவர்கள் ஆர்வத்துடனும் உற்சாகத்துடனும் பங்கேற்று தங்களது திறமைகளை வெளிப்படுத்தினர். வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பார்வையாளர்கள் வாழ்த்துகளைத் தெரிவித்தனர்.

இந்நிகழ்வில் அதிபர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டு போட்டிகளை கண்டு களித்ததுடன், மாணவர்களின் விளையாட்டுத் திறன்களை ஊக்குவிக்கும் வகையில் இந்நிகழ்வு சிறப்பாக அமைந்தது. சிவபூமி பாடசாலையின் கல்வியுடன் இணைந்த உடல்தகுதி மற்றும் ஒழுக்க வளர்ச்சிக்கான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தும் நிகழ்வாகவும் இது அமைந்தது.








SIVAPOOMI











# வட்டுக்கோட்டை சிவபூமி தேவார மடத்தின் இரண்டாம் ஆண்டு நிறைவு!



வட்டுக்கோட்டையில் அமைந்துள்ள சிவபூமி தேவார மடம் திறந்து வைக்கப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு, ஜூலை 14அன்று மட வளாகத்தில் சிறப்பு பூஜை மற்றும் வழிபாட்டு நிகழ்வுகள் பக்தி பூர்வமாக நடைபெற்றன.

இரண்டாம் ஆண்டு நிறைவை முன்னிட்டு நடைபெற்ற இந்நிகழ்வில், சிவபெருமானுக்கு விசேட ஆராதனை மற்றும் தேவாரப் பாராயணங்கள் இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சிவபூமி அறக்கட்டளையின் நிர்வாகிகள், சைவ சமயப் பெரியார்கள் மற்றும் பக்தர்கள் கலந்து கொண்டு வழிபாடுகளில் பங்கேற்றனர்.

இரண்டு ஆண்டுகளாக சைவ சமயப் பணிகள், தேவார மரபுப் பாதுகாப்பு மற்றும் ஆன்மீக விழிப்புணர்வை வளர்க்கும் நோக்கிலான நிகழ்வுகளை சிவபூமி தேவார மடம் முன்னெடுத்து வருகிறது.





# கிளிநொச்சியில் திருவள்ளுவர் சிலை திறப்பு!





கிளிநொச்சி, கம்பன் கலைக்கோயில் வளாகத்தில், விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் 197ஆம் திருவள்ளுவர் சிலையினை, விஜிபி உலகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் டாக்டர் வி.ஜி.சந்தோசம் அவர்கள் திறந்து வைத்தார்!

இவ்விழாவில், கோவிலூர் வேதாந்த மட குருமுதல்வர் சீர்வளர்சீர் நாராயண ஞானதேசிக சுவாமிகள், பம்பாய் தெற்காசிய ஸ்டான்டட் சார்ட்டட் வங்கி திரு.வி.மகாலிங்கம், மேன்முறையீட்டு மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி மாண்புமிகு ஜெ.விஸ்வநாதன், கொழும்பு கம்பன் கழகத் தலைவர் திரு.ஈ.கணேஷ் தெய்வநாயகம், கம்பபாரதி இலங்கை ஜெயராஜ் முல்லைத்தீவு அரச அதிபர் திரு.அ.உமாமகேஸ்வரன், வடமாகாண சபை முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் திரு.சி.தவராஜா, ஸ்ரீ ஐஸ்வர்யலஷ்மி தத்துவத் திருக்கோயில் கௌரவத் தலைவர் செல்வி மாலா சபாரட்ணம், அகில இலங்கை இந்துமாமன்றம் தலைவர் திருமதி அபிராமி கயிலாசபிள்ளை, தொழிலதிபர் திலக் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்!

டாக்டர் வி.ஜி.சந்தோசம் தமது உரையில், "உலகெங்கெங்கிலும் பல்வேறு இடங்களில் திருவள்ளுவர் சிலைகளை நிறுவி வருகின்றோம். இலங்கையில் இதுவரை 24 திருவள்ளுவர் சிலைகளை நிறுவியுள்ளோம் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்" என்று கூறினார்!

# வலிமைக்கும் எல்லை உண்டு



காட்டில் படுத்திருந்த சிங்கத்திடம் போய் ஒரு கொசு பேசத் தொடங்கியது.

”என்னைவிட நீ பலசாலி என்று நினைத்துக் கொண்டிருக்கிறாய் அல்லவா? அது மிகவும் தவறு.

”உன் வலிமை எப்படிப்பட்டது? பற்களை நறநற என்று கடித்து, நகங்களால் பிறாண்டுகிறாய், இது எப்படி இருக்கிறது என்றால், ஏழைப் பெண் தன் கணவனுடன் சண்டையிடுவதைப் போலத்தான் இருக்கிறது. சரி, வா, நாம் இருவரும் சண்டை போட்டுப் பார்ப்போம்” என்றது உடனே இது “ஙொய” என்று ரீங்காரம் செய்து கொண்டு சிங்கத்தின் மீது பறந்து, அதன் நாசியிலும், தாடையிலும் கடிக்கத் தொடங்கியது.

சிங்கம் கொசுவை விரட்ட, தன் நகங்களால் முகத்தைப் பிறாண்டியும், தட்டியும் தோலைக் கிழித்துக் கொண்டதில், இரத்தம் வழிந்ததோடு, களைத்தும் போய் விட்டது.

வெற்றி முழக்கத்தோடு கொசு பறந்து சென்றது. சிறிது நேரத்தில் அந்த கொசு ஒரு சிலந்தி வலையில் சிக்கிக் கொண்டது. சிலந்தி கொசுவின் இரத்தத்தை உறிஞ்சியது.

“வலிமை மிகுந்த சிங்கத்தையே வெற்றி கொண்டு, இப்போது ஓர் சிறிய சிலந்தி என்னை வதைத்துக் கொண்டிருக்கிறதே” என்று கொசு வருந்தியது.

# கஜேந்திர மோக்ஷம்



இந்திரத்யும்னன் என்னும் பாண்டிய மன்னன் தென்மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்டுவந்தான். பொதிகை மலை அவனது ஆளுகைக்கீழ் இருந்தது. அவன் சிறந்த விஷ்ணு பக்தன். அனுதினமும் வி'ணுவுக்குப் பூஜை செய்துவந்தான். தாமரை மலர்களால் அர்ச்சனை செய்து வந்தான். சிலசமயங்களில் வெளியே அமர்ந்து தியானம் செய்வதும் உண்டு. அப்படி ஒரு முறை அவன் தியானம் செய்துகொண்டிருந்த போது அகத்தியர் அந்த வழியாக வந்தார். மன்னன் அவரைக்கவனித்து வரவேற்கவில்லை. அவன் தன்னை அலட்சியப் படுத்திவிட்டதாக அகத்தியர் நினைத்தார். அவருக்குக் கோபம் வந்தது என்னதான் ஞானம் பெற்றிருந்தாலும் அந்தக் காலத்தில் முனிவர்களுக்கு அடிக்கடி கோபம் வரும். சாபம் கொடுத்து விடுவார்கள். தியானத்தில் இருந்த மன்னவன் கண்ணைத் திறந்து பார்த்து அகத்தியரை வரவேற்குமுன் அவன் யானையாகப் பிறக்கக் கடவது என்று சாபம் கொடுத்துவிட்டார். மன்னவன் காதில் அந்தச் சாபம் விழுந்தது

”தவசிரே'டரே தாங்கள் வந்ததை நான் கவனிக்கவில்லை. கவனித்திருந்தால் தக்கபடி வரவேற்றிருப்பேன். இது அறியாமல் நடந்த பிழை” என்றான். முனிவர் சற்று அவசரப்பட்டு விட்டோமோ என நினைத்தார். சாபத்தை விலக்க இயலாது. எனவே, “இந்த்ரத்யும்னா இதுவும் முற்பிறப்பின் வினைதான். இல்லாவிட்டால் எனக்கு இந்தக் கோபம் வந்திருக்காது. உனக்கு உகந்த மாதிரி ஒரு விமோசனம் தருகிறேன். நீ வணங்குகிற தெய்வம் திருமால் உன்னைச் சாபத்திலிருந்து விடுவிப்பார்” என்றார்.

அதேசமயம் ஒரு கந்தருவனும் தேவலா என்னும் முனிவரும் நட்பாக இருந்தார்கள். ஒரு முறை தேவலா முனிவர் நதியில் குளித்து முடித்து வெளியே வந்து சூரிய நமஸ்காரம் செய்யத் தொடங்கினார். அப்பொழுது அந்தக் கந்தர்வன் விளையாட்டாக அவர் காலைப் பிடித்து இழுத்தான். அவருக்குக் கோபம் வந்துவிட்டது. நீ ஒரு முதலையாகப் பிறக்கக் கடவது என்று சாபம் கொடுத்துவிட்டார். பிறகு நண்பனுக்குச் சாபம் கொடுத்துவிட்டதற்காக வருந்தி “நீ கஜேந்திரன் என்ற யானையைக் காலைப் பிடித்து இழுப்பாய். அப்பொழுது வி‘ணு தோன்றி உனக்குச் சாப விமோசனம் கொடுப்பார்” என்று சொன்னார்.

திரிகூட மலைப் பகுதியில் இந்த்ரத் துய்ம்னன் கஜேந்திரன் என்ற யானையாகவும் கந்தர்வன் ஹீஹீ என்னும் முதலையாகவும் பிறப்பெடுத்தார்கள். அந்தப் பிறவியிலும் பூர்வ ஜென்ம வாசனையாலே கஜேந்திரன் தினமும் ஒரு தாமரைப் பூவைப் பறித்து அந்தப் பகுதியில் இருந்த விஷ்ணு சிலையின்மேல் போட்டு வந்தான். அந்தப் பகுதியில் வருண பகவானால் உருவாக்கப்பட்ட சுமதா என்னும் வனத்தில் தனது மனைவி, குழந்தை குட்டிகளுடன் கஜேந்திரன் வாழ்ந்து வந்தான். அங்கிருந்த ஒரு மடுவில் ஹீஹீ என்னும் பெயரில் முதலை வாழ்ந்து வந்தது. முதலை மிகுந்த பல சாலி. கஜேந்திரனும் அப்படியே. அங்குள்ள யானைக் கூட்டத்தின் தலைவனாகத் திகழ்ந்தான்.

ஒருநாள் பூசை செய்வதற்குத் தாமரைப்பூ எங்கும் கிடைக்கவில்லை. கஜேந்திரன் யானை சுற்றி அலைந்தது. முதலை இருந்த அந்த மடுவில் ஒரே ஒரு தாமரைப்பூ இருந்தது. கஜேந்திரன் அங்குச் சென்று மடுவில் இறங்கிப் பூவைப் பறித்து விட்டுத் திரும்பியது. அப்போது ஹூஹூ என்ற முதலை கஜேந்திரனின் காலைப் பிடித்துவிட்டது. அதன் பிடி மிகவும் பலமாக இருந்ததால் அதனால் அசைய முடியவில்லை. என்றாலும் போராடிப் பார்த்தது. நீண்ட நேரம் போராட்டம் தொடர்ந்தது. கஜேந்திரன் இன்னும் வரவில்லையே என்று அதைத் தேடி அதன் குடும்பத்தினர் வந்தனர். கஜேந்திரனை மடுவில் கண்டு அதைக் காப்பாற்ற முயன்றனர் .இயலவில்லை. கஜேந்திரன் அவர்களைப் பார்த்து” நான் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் போய்விடுங்கள்” என்றான். முதலை இழுக்க கஜேந்திரன் இழுக்கப் போராட்டம் ஆண்டுக் கணக்கில் நடைபெற்றது.

நீருக்குள்ளே எப்பொழுதும் முதலை அதிகம் பலம் பெற்றதாக இருக்கும். தரையில் யானை பலம் பெற்றதாக இருக்கும். முதலையின் பலம் அதிகமாக இருக்க யானையின் பலம் குறைந்துகொண்டே போயிற்று. இனிப்போராட இயலாது என்ற நிலை வந்த போது கஜேந்திரன் இனித் திருமாலை உதவிக்கு அழைக்க வேண்டியதுதான் என்று முடிவெடுத்து “ஆதி மூலமே” என்று துதிக்கையைத் தூக்கிப் பலமாகக் குரல் கொடுத்தது. அந்த ஓலம் தீனதயாளனான திருமால் காதில் விழுந்தது. உடனே சிறிதும் தாமதிக்காமல் கருடனைக்கூட அழைத்துக் கொள்ளாமல் தனது உத்தரீயம் கீழே விழுவது கூடத் தெரியாமல் தன் சக்ராயுதத்தைக் கூட எடுத்துக் கொள்ளாமல் வேகமாக வந்தான். திருமால் அதி வேகமாகச் செல்லுவதைப் பார்த்த கருடன் பின்னாலேயே பறந்து வந்தது. சக்ராயுதம் தானும் பறந்து வந்து அவர் கையில் ஏறிக்கொண்டது திருமால் மடுவருகே வந்து நின்றதும் ஆதிமூலமே என்று கஜேந்திரன் அழைத்ததற்கும் திருமால் மடுக்கரையில் இருந்ததற்கும் இடையிலே ஒரு கண நேரம் கூட இருக்காது. கஜேந்திரனின் போராட்டத்தைப் பார்த்த திருமால் தனது சக்கராயுத்தை ஏவி முதலையைக் கொன்றான்.

முதலை சாபவிமோசனம் பெற்றுக் கந்தர்வனானான். கஜேந்திரன் வைகுண்ட பதவி பெற்றது. தன்னாலே இயலாது என்ற நிலை வரும் போது இறைவனிடம் விட்டுவிட்டால் இறைவன் காப்பாற்றுவான் என்பதற்கு இது ஒரு சான்று.



# யாழ். பல்கலைக்கழக தொல்லியல் மாணவர்கள் சிவபூமி திருவள்ளுவர் வளாகத்திற்கு களப்பயணம்!




தொல்லியல் திணைக்களத்தின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகத்தின் ஏற்பாட்டில், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொல்லியல் அலகு மாணவர்களுக்காக யாழ்ப்பாணத்தின் முக்கிய மரபுரிமை இடங்களை மையமாகக் கொண்ட களப்பயணம் ஜூலை 13 அன்று தொல்லியல் தினத்தை மையப்படுத்தி நடைபெற்றது.

அதன் ஒரு பகுதியாக, மாவிட்டபுரத்தில் அமைந்துள்ள சிவபூமி திருவள்ளுவர் அரண்மனைக்கும் மாணவர்கள் விஜயம் செய்தனர். இதன்போது அரண்மனையின் உருவாக்கம், பண்பாட்டு முக்கியத்துவம் விளக்கப்பட்டது. மற்றும் அங்கு 1330 திருக்குறள்களும் கருங்கற்களில் பதிப்பிக்கப்பட்டுள்ளமையையும், காட்சிப்படுத்தப்பட்டுள்ள திருக்குறள் தொடர்பான அம்சங்களையும் மாணவர்கள் ஆர்வத்துடன் பார்த்து மகிழ்ந்தனர்.

இந்நிகழ்வு மாணவர்களின் தொல்லியல் மற்றும் பண்பாட்டு மரபுரிமை தொடர்பான களஅறிவை மேம்படுத்தும் வகையில் அமைந்தது.

# தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் பிரமாண்டமான புதிய அன்ன சத்திரம் திறந்து வைக்கப்பட்டது





அடியார்களுக்கு அன்னதானப் பணியை தொடர்ந்து மேற்கொண்டு வரும் தெல்லிப்பழை துர்க்கா தேவஸ்தானத்தின் புதுப்பொலிவூட்டப்பட்ட அன்னசத்திரம் ஜூலை-12அன்று ஆனிப் பிரதோச நன்னாளில் திறந்து வைக்கப்பட்டது.

தேவஸ்தான நிர்வாக சபைத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தமிழகத்தின் பிரபல பேச்சாளர் செந்தமிழ்ச் சுடர் திரு. கி. சிவகுமார் சிறப்பு பேச்சாளராக கலந்து கொண்டார். இவர் தனது சிறப்பு உரையில், ”கருவறைக்குள்ளே துர்க்காதேவி புடவை அணிந்திருக்கிறாள். கருவறைக்கு வெளியே அம்பிகை அன்னை வேட்டி அணிந்து இங்கே வெளியே இருக்கிறாள்” தேவஸ்தான நிர்வாகத் தலைவர் ஆறு. திருமுருகனாரின் பெரும் பணிகளினை வியந்து உரைத்தார்.

167 அடி நீளமும் 39 அடி அகலமும் கொண்ட நவீன வடிவமைப்பில் புதுப்பிக்கப்பட்டுள்ள அன்னசத்திரம், ஒரே நேரத்தில் சுமார் 1,000-க்கும் மேற்பட்ட அடியார்களுக்கு உணவு பரிமாறும் வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. அன்னசத்திரம் மூன்று தனித்தனி பகுதிகளாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இதில் சிறுவர்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கென ஒரு பகுதி, மூத்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கென மற்றொரு பகுதி, ஏனைய அடியார்களுக்கென மூன்றாவது பகுதி ஒதுக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, மூத்தோர் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கதிரைகளில் அமர்ந்து சிரமமின்றி உணவருந்தும் வகையில் சிறப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.




அடியார்களின் வசதியை கருத்தில் கொண்டு கடந்த தைப்பூசத் திருநாளில் அன்னசத்திரத்தின் திருப்பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, குறுகிய காலத்திலேயே பணிகள் நிறைவடைந்து, ஜூலை-12அன்று திறந்து வைக்கப்பட்டது.

அன்ன சத்திர திறப்பு விழாவில் மாணவர்களின் கலை நிகழ்வுகளும் ஏற்பாடு செய்யப்பட்டது. யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மாணவர்களின் கோவலன்- கண்ணகி சரிதம் வில்லிசை நிகழ்வு பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்திருந்தது.

அன்னசத்திர திருப்பணிகள் வெற்றிகரமாக நிறைவு பெறுவதற்கு பல்வேறு வழிகளில் உதவிய அம்பாள் அடியார்களுக்கும் நன்கொடையாளர்களுக்கும் தேவஸ்தான நிர்வாகம் நன்றியைத் தெரிவித்துள்ளது.

அம்பாளின் திருவருளால் அனைத்து திருப்பணிகளும் ஆரம்பிக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவு பெறுகின்றன என்ற நம்பிக்கையுடன், புதுப்பொலிவுடன் திறந்து வைக்கப்பட்டுள்ள அன்னசத்திரம் எதிர்காலத்தில் மேலும் பல ஆயிரக்கணக்கான பக்தர்களுக்கு பயனளிக்கும் என தேவஸ்தான நிர்வாகம் நம்பிக்கை வெளியிட்டுள்ளது.




# வடமாகாண மெய்வல்லுநர் போட்டியில் யாழ். இந்து இரண்டமிடம்!




வரலாற்றில் முதன்முறையாக, 2026ஆம் ஆண்டு வட மாகாண பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுநர் போட்டியில், மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி உயரிய இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளது.

மன்னார் சென். சேவியர் ஆண்கள் தேசிய பாடசாலை மொத்தப் புள்ளிகளிள் அடிப்படையில் 181 புள்ளிகளுடன் முதலிடத்தை பெற்றுள்ளது. தொடர்ந்து யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி 140 புள்ளிகளுடன் இரண்டாம் இடத்தையும், யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி 94 புள்ளிகளுடன் மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

அண்மைக் காலங்களில் விளையாட்டுத்அதிகரித்அண்மைக் காலங்களில் விளையாட்டுத்துறையில் அதிகரித்து வரும் யாழ். இந்து மாணவர்களின் ஈடுபாடு பாராட்டுக்களைப் பெற்று வருகின்றது. விளையாட்டுத்துறையில் சாதிக்கும் மாணவர்கள் கல்வியிலும் உயர்நிலை பெறுகின்றமை க.பொ.த உயர்தர மற்றும் சாதாரண தர பெறுபேறுகளில் அவதானிக்கக் கூடியதாகவும் உள்ளது

# யாழ். இந்து ஹொக்கி சாதனை!




யாழ் இந்துக் கல்லூரியின் ஹொக்கி அணி, வரலாற்றில் முதன்முறையாக தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளது.

வட மாகாண மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான ஹொக்கிப் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பெற்று, தேசிய மட்டப் போட்டியில் பங்கேற்கும் தகுதியைப் பெற்றுள்ளது.

யாழ் இந்துக் கல்லூரியில் ஹொக்கி விளையாட்டு 1980களில் இடம்பெற்றிருந்த போதிலும், பின்னர் சுமார் 40 ஆண்டுகளாக அந்த விளையாட்டு கைவிடப்பட்டிருந்தது. அதன் பின்னர், 2022 ஆம் ஆண்டு ஹொக்கி அணி மீள நிறுவப்பட்டு, திட்டமிட்ட பயிற்சிகள் முன்னெடுக்கப்பட்டன.

# கதிர்காமக் கந்தன் ஆலய ஆடிப் பெருந்திருவிழா கொடியேற்றத்துடன் விமர்சையாக ஆரம்பம்!



இலங்கையின் வரலாற்றுச் சிறப்புமிக்க ஆன்மீகத் தலங்களில் ஒன்றான கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் வருடாந்த ஆடிப் பெருந்திருவிழா ஜூலை-15அன்று கொடியேற்றத்துடன் மிகவும் விமர்சையாகத் தொடங்கியுள்ளது.

ஆடிப் பௌர்ணமியை முன்னிட்டு 15 நாட்கள் நடைபெறும் இத்திருவிழாவில் பங்கேற்க உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பக்தர்கள் கதிர்காமத்தில் குவிந்து வருகின்றனர்.

நிகழ்வுகளின் விபரம்:

கொடியேற்றம்: ஜூலை-15அன்று பாரம்பரிய முறைப்படி கொடியேற்றப்பட்டு விழா ஆரம்பமானது.

பிரசித்தி பெற்ற பெரேஹரா: விழா நாட்கள் முழுவதும் தினமும் மாலை வேளையில் யானைகளின் பிரம்மாண்ட அணிவகுப்பு மற்றும் பாரம்பரிய நடனங்களுடன் கூடிய கலைச்சாரம் மிக்க “பெரேஹரா” ஊர்வலம் நடைபெறும்.

தீர்த்தோற்சவம்: திருவிழாவின் முக்கிய நிகழ்வான தீர்த்தோற்சவம் எதிர்வரும் ஜூலை 29அன்று மாணிக்க கங்கையில் வெகு விமரிசையாக நடைபெறவுள்ளது.

திறக்கப்பட்ட காட்டுப்பாதை:
இத்திருவிழாவை முன்னிட்டு, நாட்டின் பல பாகங்களில் இருந்தும், குறிப்பாக முல்லைத்தீவு மற்றும் யாழ்ப்பாணத்திலிருந்து பாதயாத்திரையாக வரும் பக்தர்களின் வசதிக்காக உகந்தை வழியூடான காட்டுப்பாதை ஜூலை-10 அன்று திறக்கப்பட்டது. இப்பாதை வரும் ஜூலை-25 ஆம் தேதி வரை மட்டுமே திறந்திருக்கும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இதனால் பக்தர்கள் பாதுகாப்பு வழிமுறைகளைப் பின்பற்றி அடர்ந்த காட்டுப்பகுதியைக் கடந்து கதிர்காமத்தை நோக்கி வந்தவண்ணம் உள்ளனர்.

சிறப்பு வழிபாடு:
கதிர்காம ஆலயத்தின் தனித்துவமான அம்சமாக, மூல விக்கிரகத்திற்குப் பதிலாக வள்ளி, தெய்வானை சமேத முருகப் பெருமானின் சித்திரம் வரையப்பட்ட திரைச்சீலைக்கே இந்த திருவிழா காலத்திலும் விசே‘ பூசைகளும் திரைத் தரிசன வழிபாடுகளும் நடத்தப்பட்டு வருகின்றன. பக்தர்களின் பாதுகாப்பு மற்றும் குடிநீர், மருத்துவ வசதிகளுக்காகத் தற்காலிக முகாம்களும் பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

இந்தப் பத்திரிகை சிவபூமி அறக்கட்டளையால் வெளியிடப்பட்டுள்ளது.(ஆனி-2026) ISBN-978-955-7420-00-4